2017 ஜூலை 5] [திரு. எம்.சி. சம்பத்]

முடியாது. அதையும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கருத்தில் கொள்ள வேண்டுமென்ற அன்பான வேண்டுகோளை இந்த நல்ல நேரத்திலே வைத்து, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமருகிறேன்.

(இ) சங்கராபுரம் தொகுதி, சின்னசேலம் வட்டம், அரசு உண்டு உறைவிட மலைவாழ் மேல்நிலைப் பள்ளி மாணவன் அரவிந்தன் உயிரிழப்பு

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் அவர்கள்.

திரு. தா. உதயசூரியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 24–6–2017 அன்று என்னுடைய சங்கராபுரம் தொகுதியில் கோமுகி அணையிலுள்ள அரசினர் உண்டு உறைவிட மலைவாழ் மேல்நிலைப் பள்ளியில் படிக்கின்ற 6 ஆம் வகுப்பு மாணவர்கள் குளிப்பதற்கு விடுதியில் தண்ணீர் இல்லாத காரணத்தினால், பக்கத்திலே இருக்கின்ற கோமுகி அணையில் குளிக்கச் சென்றபோது, அரவிந்தன், சூரியா உள்ளிட்ட மற்ற மாணவர்கள் சேர்ந்து குளிக்கின்றபோது, அரவிந்தன் என்ற மாணவன் அந்த ஆற்றிலேயே இறந்துவிட்டான். தகவல் தெரிந்து மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று, பிரேதப் பரிசோதனைச் செய்து, நானே உடன் இருந்து உடலை அடக்கம் செய்தோம். அந்த விடுதிக் காப்பாளர்மீது, துறையின் வாயிலாக 3 மாதங்களுக்கு முன்பு நடவடிக்கை எடுக்கப்பட்டு மீண்டும் அதே பள்ளி விடுதியில் அவர் பணியமர்த்தப்பட்டிருக்கிறார். இந்தக் கவனக் குறைவும் ஒரு காரணம். அந்தப் பள்ளியில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் படிக்கின்றனர். 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள மேல்நிலைப் பள்ளி. ஆகவே, குளிப்பதற்கு தண்ணீர் இல்லாத காரணத்தினால் அந்த மாணவர்கள் பக்கத்தில் இருக்கின்ற கோமுகி ஆற்றில்தான் குளிக்கச் செல்லுகின்ற நிலைமை இருக்கின்றது. ஆக, அப்படி இருக்கின்றபோது இந்த மாணவன் இறந்திருக்கின்றான். ஆகவே, இதைக் கருத்திலே கொண்டு, நேற்றைக்கு முதல் நாள் நான் கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொடுத்திருந்தேன். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரணம் வழங்க வேண்டுமென்றும், அந்த விடுதிக் காப்பாளர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டிருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. தா. உதயசூரியன்: *அதன் அடிப்படையில், மறைந்த மாணவன் அரவிந்தனின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிற கருத்தை நேற்று தெரிந்துகொண்டேன். ஒரு இலட்சம் ரூபாய் நிதியுதவியை அந்தக் குடும்பத்தாருக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக தொகுதி மக்களின் சார்பிலும், அந்தக் குடும்பத்தாரின் சார்பிலும், என்னுடைய சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, அந்த 1 இலட்சம் ரூபாய் நிதியுதவி போதாது. முழுக்க முழுக்க மலைவாழ் பழங்குடியின மக்கள் வாழ்கின்ற, அந்த கல்வராயன் மலையிலிருந்துதான் அந்தப் பள்ளியில் படிக்கின்ற 90 சதவிகித மாணவ–மாணவிகள் வருகிறார்கள். ஆகவே, இதனைக் கருத்தில் கொண்டு, குறைந்தது 5 இலட்சம் ரூபாய் நிதியாவது அந்தக் குடும்பத்தாருக்கு வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், சின்ன சேலம் வட்டம், கோமுகி அணை, அரசு மலைவாழ், உண்டு உறைவிட மேல்நிலைப் பள்ளியில் 6 ஆம் வகுப்பு படித்து வந்த, நாராயணம்பட்டி கிணத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சௌந்தர்ராஜன் என்பவரது மகன் அரவிந்தன் என்பவர் 24–6–2017 அன்று கச்சிராப்பாளையம், கோமுகி ஆற்றின் கால்வாயில் குளிக்கச் சென்றபோது எதிர்பாராத விதமாகத் தண்ணீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்ததோடு, அவரது குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டதுடன், செல்வன் அரவிந்தன் குடும்பத்திற்கு 1 இலட்சம் ரூபாய் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன். இதுதொடர்பாக அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியர் மற்றும் விடுதிக் காப்பாளர் தற்காலிகமாக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், அந்த விடுதியில் அடிப்படை வசதிகளில் ஏதேனும் குறைபாடுகள்

2017 ஜூலை 5] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

உள்ளனவா என்பது குறித்து விசாரணை மேற்கொள்ளவும், அவ்வாறு ஏதேனும் குறைபாடு இருப்பின் அதை உடனடியாக நிவர்த்தி செய்ய தக்க நடவடிக்கை எடுக்கவும் மாவட்ட நிருவாகத்திற்கு உத்தரவிட்டுள்ளேன் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(ஈ) மதுரை மாநகராட்சியோடு இணைக்கப்பட்ட 28 வார்டுகளுக்கு பாதாளச் சாக்கடைத் திட்டம் மற்றும் ஆணையூர் பகுதியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி, என்ன? சுருக்கமாகச் சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. பிரின்ஸ், கொஞ்சம் இருங்கள்.*

முற்பகல் 11–40

***திரு. பி. மூர்த்தி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறப்பு வாய்ந்த மதுரை மாநகராட்சியோடு, 2011 ஆம் ஆண்டு, புதிதாக 28 வார்டுகள் இணைக்கப்பட்டு 6 ஆண்டுகளுக்கு மேலாகியுள்ளன. என்னுடைய மதுரை கிழக்குத் தொகுதியிலே 11 வார்டுகள். ஆணையூர் பகுதி, கண்ணனேந்தல், திருப்பாலை, நாகனாகுளம், உத்தன்குடி, வண்டியூர் ஆகிய பகுதிகளிலே 11 வார்டுகள் ஏறத்தாழ 3 இலட்சம் மக்களுக்கு மேலாக அங்கே இருக்கின்றார்கள். அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய தொகுதியின் இரண்டு வார்டுகளும், மதுரை வடக்குத் தொகுதியின் இரண்டு வார்டுகளும், திருப்பரங்குன்றம் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. ஏ.கே. போஸ் அவர்களின் தொகுதியின் 13 வார்டுகளும் சேர்த்து, 28 வார்டுகளுக்கும் பாதாளச் சாக்கடை அமைத்துத் தருவதற்கு முன்னாள் முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டு இன்னும் அந்தப் பணிகள் துவங்கப்படாமல் இருக்கின்றன. எனவே அந்தப் பணியைத் துவக்குவதோடு, மாநகராட்சிப் பகுதி 2, 3, 4, வார்டுகளில் கூட்டுக் குடிநீர்த் திட்டம். . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் என்ன?*